



Signature Not Verified
Signed by: Assistant Director
Location: Tiruppur
Date:2022.11.2

# நகர் ஊரமைப்பு துறை (DTCP) திருப்பூர் மாவட்ட அலுவலகம்

## அவினாசி ஊராட்சி ஒன்றியம்

## பெருமாநல்லூர் ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியம், பெருமாநல்லூர் ஊராட்சி மற்றும் கிராமம், புல எண்கள்: **43/1A2 , 43/1A4** -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்க்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:500

இணையவழி விண்ணப்ப எண் : **E8UR5YW4** & நாள் : **20.09.2022**

குறிப்பு:

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு (பட்டாவின் படி) : 2.05½ ஏக்கர் (அ) 8316.00 ச.மீ

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை

மனைப்பிரிவு சாலை

கோரிய மனைகள் : 43

ஒதுக்கிய மனைகள் : 42

பொது ஒதுக்கீடு:

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 2582.32 ச.மீ

பூங்கா : (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவுசாலையின் பரப்பு) **x** 10%
: (8316.00-2582.32) **x** 10% : 573.37 ச.மீ

ஒதுக்கிய பூங்கா பரப்பு :580.00ச.மீ (10.11%) மனுதாரரால் அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை செலுத்தப்பட்டுள்ளது.

பொது உபயோகம் மற்றும் மின் பகிர்மானத்திற்குரிய இடம் (தேவையான அளவு) : 28.67 ச.மீ. (0.50%)

பொது உபயோகம் (A) ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 76.24 ச.மீ. (1.33%)

TANGEDCO (B) ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 61.25 ச.மீ. (1.07%)

கட்டிட வரம்பு :9.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
9.0மீ-க்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ-ம் விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு :12.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீx1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
12.0மீ-க்கு மேல் 30.50மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5மீx4.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

## நிபந்தனைகள்

1. அரசாணை எண் : 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் :14.02.2019 (ம) அரசாணை எண் : 16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் :31.01.2020-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
2. அரசாணை எண் : 181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020 ன் படி, உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதிகள் , மேல்நிலைத்தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படைவசதிகளை மனுதாரரால் அமைக்கப்பட்டு , அதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. இம் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமும். விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6 x 4 அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப் படவேண்டும்.
7. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி-திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம். குத்தகை பத்திரம். பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
8. மனையின் ஊடே செல்லும் குறைந்த அழுத்த மின் கம்பி பாதையினை மனைப்பிரிவு சாலைக்கு ஏற்ப மனுதாரர் தனது சொந்த செலவில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர், உத்தேச சாலைகளின் தரம் குறித்து உள்ளாட்சி பொறியாளரிடமிருந்து தகுதிச் சான்று பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

**SWP / DTCP / TIRUPPUR / LAYOUT APPROVAL NO : 346/2022**

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உதவி இயக்குநர் (மு.கூ.பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ,
திருப்பூர் மாவட்டம்.